MC.No.11/2022 நாள் 19.03.2024

P.W.1 திரு.புவனேஸ்வரி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பு குறுக்குவிசாரணை :</u>**

1) இந்த மனு தாக்கல் செய்வதற்கு முன்பாக எனது கணவர் அவருடன் சேர்ந்து வாழ கோரி HMOP.No.70/2021 என்ற மனுவினை தாக்கல் செய்து இருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு தாக்கல் செய்து ஒரு வருடம் கழித்து இந்த மனுவை நான் தாக்கல் செய்தேன் என்றால் இருக்கலாம், எனக்கு ஞாபகம் இல்லை. சார்பு நீதிமன்றத்தில் உள்ள மனுவில் எனக்கும், எனது கணவருக்கும் சமரசம் பேசப்பட்டது என்றால் சரிதான். அந்த சமரச பேச்சில் எதிர்மனுதாரர் என் வீட்டில் என்னுடன் சேர்ந்து வாழ பேசி ஒப்புக்கொண்டார் என்றால் சரிதான். அந்த முடிவின் படி எனது கணவர், என்னுடன் சேர்ந்து வாழ என் வீட்டிற்கு வந்தார் என்றால் சரிதான்.

2) எனது கணவருடன் சேர்ந்து வாழ பிடிக்காத காரணத்தினால் அவரை வரவேண்டாம் என்று கூறிவிட்டேன் என்றால் சரிதான். ஆனால் அவர் தொடர்ந்து பிரச்சனை செய்ததால் அவ்வாறு கூறினேன். அவரை பிடிக்காமல் அவரை வரவேண்டாம் என்று கூறவில்லை. உண்மையில் எனது கணவர் சேர்ந்து வாழ என் வீட்டிற்கு வந்தபோது வீட்டில் உள்ள யாரும் அவருடன் பேசவில்லை என்றால் சரியல்ல, அவருக்கு குடிக்க தண்ணீர் கூட கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, டீ வைத்து கொடுத்தோம், சாப்பாடு போட்டோம். எனது கணவர் தற்போதும் என்னுடன் சேர்ந்து வாழ தயாரா இருக்கிறார் என்றால் பல முறை அவ்வாறு தான் சொல்கிறார், ஆனால் எனது பெற்றோரையும், எனது குழந்தையும், என்னையும் அடிக்கிறார். தகாத வார்த்தையால் திட்டினார்.

3) எனது கணவர் நான் சொல்லியதுபோல் அடித்து இருந்தால், கொடுமை படுத்தியிருந்தாலும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து இருப்பேன் என்றால் சரியல்ல. உண்மையில் நடந்தது, ஆனால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. உண்மையில் நான் சொன்னதுபோல் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அதனால் தான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரரிடம் உள்ள கொஞ்ச சொத்தையும் பறிக்கவேண்டி இந்த வழக்கையும்,

எனது மகளை வைத்து மற்றொரு பாக வழக்கையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்களுக்கு திருமணம் நடந்து 4 வருட காலமாக எந்த பிரச்சனையும் இல்லாமல் வாழ்ந்து வந்தோம் என்றால் அதிக வருடங்கள் வாழ்ந்தோம். வருடங்கள் கணக்காக எனக்கு ஞாபகம் இல்லை.

4) எனது கணவர் என்னை தறி ஓட்டி சொல்லி துண்புறுத்தவில்லை என்றாலும், எனக்கு தறி ஓட்டவே தெரியாது என்றாலும் சரியல்ல, எனக்கு தறி தொழில் தெரியும், எதிர்மனுதாரர் என்னை தறி வேலை செய்ய சொல்லியிருக்கிறார், நான் செய்துள்ளேன். பால் கரக்கும்வேலையும், மற்ற வீட்டு வேலைகளும், தோட்ட வேலைகளையும் எதிர்மனுதாரர் செய்ய சொல்லி செய்துள்ளேன். குடும்பத்திற்காக நான் குடும்ப தலைவி என்ற விதத்தில் நான் நானாக மேற்படி வேலைகளை செய்தேன் என்றால் சரியல்ல, எனக்கு முடியாத சமயத்தில் மேற்படி வேலைகளை செய்ய சொல்லி கொடுமைப்படுத்தினார்கள். இதை வெளியே சொல்லகூடாது என்றும், குறிப்பாக எனது பெற்றோரிடம் சொல்லக்கூடாது என்று சொல்லி மிரட்டினார்கள். உண்மையில் எதிர்மனுதாரர் என்னை கொடுமைபடுத்தவில்லை என்றாலும், நான் எனது கணவரை கொடுமை படுத்தினேன் என்றால் சரியல்ல. அவர் என்னை கொடுமை படுத்தினார் என்று சொல்லி சாட்சி அழுகிறார். உண்மையில் நகைகளை எனது கணவர் அடமானம் வைக்கவில்லை என்றாலும், எனது சாகோதரர்களிடம் கொடுத்து அடமானம் வைத்துள்ளேன் என்றாலும் ஒரு முறை நான் எனது அண்ணன் என்னிடமிருந்து வாங்கி அடமானம் வைத்து பின் மீட்டு கொடுத்துவிட்டார். அதன்பிறகு எதிர்மனுதாரர் பல முறை என் நகைகளை மிரட்டி வாங்கி அடமானம் வைத்து ஒரு முறை மட்டும் மீட்டு கொடுத்தார்.

5) நான் எனது நகைகளை எனது வீட்டிற்கு எடுத்துச்சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வீட்டில் தான் வைத்திருந்தேன். எதிர்மனுதாரர் வீட்டில் இல்லாத சமயத்தில் நகைகள், பாத்திரம், மற்ற பொருட்களை எடுத்துச்சென்றேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் அவரது பெற்றோருடன் வீட்டில் இருந்தபோது நான் அவரது வீட்டிற்கு சென்று எனது உடைகளை மட்டும் எடுத்து வந்தேன். வேறு எந்த பொருட்களும் எடுத்து வரவில்லை. 2013 ஆம் ஆண்டில் எனது குழந்தையை அழைத்துக்கொண்டு எனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். ஆனால் பேச்சுவார்த்தை மூலமாக நான் எதிர்மனுதாரர் வீட்டிற்கு வந்துவிட்டேன்.

உண்மையில் எதிர்மனுதாரர் வீட்டிற்கு நான் வரவில்லை என்றாலும், வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) எனது குடும்பத்தில் எனது அப்பாவும், அம்மாவும் சுமார் 10 வருட காலமாக பேசாமல் இருந்தார்கள் என்றால் சரியல்ல. அதேபோல் எனது சகோதரியின் கணவரும் எனது சாகோதரியை விட்டு சில காலம் பிறிந்து வாழ்ந்தார்கள் என்றால் சரியல்ல. பொதுவாக எங்கள் குடும்பத்தில் ஆண்களை மாதிக்காமல் ஆணுடன் சேர்ந்து வாழ விரும்பாமல் பிறிந்து வாழ்வோம் என்றால் சரியல்ல. எனது அண்ணன் அவரது மனைவியை பிறிந்து சில வருடம் காலம் பிறிந்து தற்போது தான் சேர்ந்து வாழ்கிறார் என்றால் சரியல்ல. அதனால் நானும், குடும்ப வாழ்க்கை பிடிக்காமல் தனியாக வாழ்ந்து வருகிறேன் என்றால் சரியல்ல. பல வருடங்கள் எனது கணவரைவிட்டு நான் பிறிந்து வாழ்வதால் எனக்கு ஜீவனாம்சம் கேட்க தகுதி இல்லை என்றாலும், எனக்கு சொந்தமாக கால்நடைகள், நிலம் ஆகியவை உள்ளது என்றாலும், எனது பூமியை விற்ற பணத்தை வட்டிக்கு விட்டு வருமானம் சம்பாதித்து வருகிறேன் என்றாலும், அதனால் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விரும்பவில்லை என்றாலும் சரியல்ல, எனக்கு சொந்தமாக எதுவும் இல்லை, எனது பெற்றோர்கள் கொடுக்கும் சிறிய பணத் தொகையை கஷ்டு ஜீவனம் செய்து வருகிறேன். நான் எந்த நிலத்தையும் விற்கவில்லை, அதன் மூலம் பணமும் பெறவில்லை.

7) எதிர்மனுதாரர் அவரது பெற்றோரை பிறிந்து தனியாக தனிக்குடுத்தினம் நான் கேட்டதின்பேரில் 3 வீடுகள் பார்த்தும் நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ மறுக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் உறவினர் நடராஜ் என்பவர் எங்களுக்கு இடையே பைசல் பேசினார்கள் என்றால் சரிதான், அவரும், மேலும் பல நபர்களும் பைசல் பேசினார்கள். நான் எதிர்மனுதாரர் வீட்டிற்கு செல்வேன், சிறிது நாட்களில் எதிர்மனுதாரர் சண்டைபோடுவார் அவர் என்னை அடித்து கொடுமை படுத்தி என்னை எனது வீட்டில் வந்து விட்டுவிடுவார். உண்மையில் நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வரவில்லை என்றாலும், அந்த சூழ்நிலையில் எதிர்மனுதார் கொடுமை படுத்தியதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு தறி தொழில் நலிவடைந்து தறி தொழிலை விட்டுவிட்டார் என்றால் சரியல்ல, அவருக்கு தறி தொழில் மாதம் ரூ.80000/- வருமானம் ஈடுவதாக நான்

வழக்கிறக்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வந்து 4 வருடங்களாகிவிட்டது. நான் வரும்போது தறி, வீட்டு வாடகை மூலம் வருமானம் ஈட்டிவந்தார். இப்போதும் அப்படி உள்ளார் என்று கூறினார்கள். குடோன் எந்தவித உபயோகமும் இல்லாமல் உள்ளது என்றாலும், அதற்கு ரூ.20,000/– வாடகை வராது என்றாலும், அந்த இடத்தில் அவ்வளவு மதிப்பு இல்லை என்றாலும் சரியல்ல.

8) எனக்கு முழுமையாக எந்த விபரம் தெரியாததால் நான் மிகைப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல, எதிர்மனுதாரரே என்னிடம் நேரடியாக கூறியுள்ளார். எதிர்மனுதாரரிடம் பேச்சுவார்த்தை இல்லாதபோது என்னிடம் அவர் கூறியிருக்கமாட்டார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு ஒரு முறை பாம்பு கடித்து அவருக்கு கை, கால் சரியாக செயல்படாமல் வருமானம் ஈட்டமுடியாத நிலையில் உள்ளார் என்றாலும், நான் கோரியபடி ஜீவனம்சம் கொடுக்கமுடியாது என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு 5 ½ ஏக்கர் நிலம் பூமி இல்லை என்றாலும், அவருக்கு 85 சென்ட் பூமி மட்டுமே உள்ளது என்றால் சரிதான். மிகைப்படுத்தி பொய்யாக மனு தாக்கல் செய்துள்ளதால் இந்த மனு நிலைக்கதக்கதல்ல என்றாலும், எனக்கு போதுமான வருமானம் வருவதால் எனக்கு ஜீவனாம்சம் கொடுக்கதேவையில்லை என்றாலும் சரியல்ல. மனுதள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

K CHITHRA

Digitally signed by K CHITHRA
Date: 2024.03.19 19:07:00 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.